பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 05 2026 THURSDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா இன்று தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

2. சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருப்பவர்களை, சொந்த நாட்டிற்கு அனுப்புவதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்

3. தமிழகம், கேரளம் உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. நிலக்கரி எரிவாயு திட்டம் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் பாதுகாப்பிற்கு பெரிதும் உதவிடும் என்று மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்

5. Hormuz நீரிணை பகுதியில் ஈரான் - அமெரிக்கா இடையேயான தாக்குதல் தீவிரமடைந்துள்ளது.

>>>>><<<<<

கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா இன்று தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பெங்களூரு மக்கள் மாளிகைக்கு சென்று தமது ராஜினாமா கடிதத்தை வழங்கினார்.

இந்நிலையில், அம்மாநிலத்தின் புதிய முதலமைச்சராக திரு. **D.K.** சிவக்குமார் நாளை பதவியேற்கவுள்ளதாக கர்நாடக மாநில அமைச்சர் திரு. H.K. Patil தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவின்படி, திரு. சித்தராமையா தமது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக கூறினார்.

கர்நாடகாவில் 8 ஆண்டுகள் முதலமைச்சராக திரு. சித்தராமையா பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், நாளை முதல் கேரளம், கர்நாடகா, கோவா மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

நாளை பெங்களூருவில் “வாழும் கலை” அமைப்பின் 45வது ஆண்டு நிறைவு விழாவில் அவர் கலந்து கொள்கிறார்.

தேவாங்கரே-யில் உள்ள தனியார் பொறியியல் நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் 75வது ஆண்டு கொண்டாட்டங்களிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

பின்னர், கோவா செல்லும் குடியரசு துணைத்தலைவர், பனாஜியில் கோவா மாநில நிறுவன நாள் விழாவிலும், CSIR-ன் கடல்சார் தேசிய கல்வி நிறுவன நிகழ்ச்சியிலும் பங்கேற்கவுள்ளார்.

>>>>><<<<<

ஸ்லோவேனியா பிரதமராக Janez Jansa பதவியேற்றதற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில, ஸ்லோவேனியா பிரதமருடன் இணைந்து செயல்பட ஆவலுடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாட்டு உறவுகளை மேம்படுத்த ஒருங்கிணைந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருப்பவர்களை கண்டறிந்து, அவர்களை சொந்த நாட்டிற்கு அனுப்புவதில் இந்தியா உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் 340 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத் திட்டங்களை தொடங்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் பேசிய அவர், நாட்டின் எல்லைகளை பாதுகாப்பதிலும், சட்டவிரோத ஊடுருவலை முற்றிலுமாக தடுக்கவும் உறுதியான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாக தெரிவித்தார்.

மேற்குவங்க மாநிலத்தில் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், எல்லைப் பாதுகாப்பு படையினருக்கு மாநில அரசு 600 ஹெக்டேர் நிலத்தை வழங்கியிருப்பதாகவும், அதற்காக தமது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதாக அமைச்சர் கூறினார்.

வீர சாவர்க்கரின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை குறிப்பிட்ட அவர், நாட்டிற்காக அவர் அளித்த பங்களிப்பும், தன்னிகரற்ற தியாகமும் என்றும் நினைவுகூரத்தக்கவை என்று தெரிவித்தார்.

குஜராத் மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களையும் திரு. அமித் ஷா தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

தமிழகம், கேரளம் உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு பிரதம மந்திரியின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

காணொலி மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3 கோடியே 91 லட்சம் வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், 3 கோடி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் 75 சதவீத வீடுகள் மகளிர் அல்லது கூட்டு உரிமையாளர் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு, வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<

விவசாயிகளின் கடின உழைப்பால், நாட்டில் உணவு தானிய பற்றாக்குறை இல்லை என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் கரீப் பருவம் தொடர்பான தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், உணவு தானிய உற்பத்தி, நடப்பாண்டு 37 கோடியே 60 லட்சம் டன்னாக அதிகரிக்கக்கூடும் என்று தெரிவித்தார்.

மத்திய அரசு விவசாயத்திற்கும், விவசாயிகளின் நலனுக்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

உலகிலேயே, மிக அதிகமான அரிசி உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டில், நிலையான விவசாயம், அதிக உற்பத்தி, பருவநிலைக்கேற்ற சாகுபடி, கட்டமைப்பு மேம்பாடு, விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் ஈட்டுவது உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

>>>>><<<<<

தெலங்கானா மாநிலம், Kazipet-ல் உள்ள ரயில் உற்பத்தி தொழிற்சாலை மூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் 200 இன்டர்சிட்டி ரயில்கள் உற்பத்தி செய்யப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

காஸிபேட் ரயில் தொழிற்சாலையை இணையமைச்சர் திரு. ரவ்னீத் சிங் பிட்டு மற்றும் உயரதிகாரிகளுடன் ஆய்வு செய்த அவர், இரண்டு முக்கிய நகரங்களுக்கு இடையே 300 கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் பயணிக்கும் இந்த ரயில்கள் பல இடங்களில் நின்று செல்வதால், அதிக மக்கள் பயன்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்டர்சிட்டி ரயில்களில் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில், குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

புதிதாக கொண்டு வரப்படும் இன்டர்சிட்டி ரயில்களில், தானியங்கி கதவுகள் அமைக்கப்படும் என்றும், போதிய வெளிச்சம் மற்றும் காற்றோட்ட வசதியுடனும், மிகுந்த பாதுகாப்பு அம்சங்களுடனும் பெட்டிகள் வடிவமைக்கப்படுவதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

எதிர்கால எரிசக்தி தேவையை கருத்தில் கொண்டு வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வருவதாக நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிலக்கரி எரிவாயு திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய அவர், தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு நிலக்கரி எரிவாயு திட்டம் பெரிதும் உதவிடும் என்று கூறினார்.

இந்த திட்டத்தை, மத்திய அரசு 8 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் தொடங்கியுள்ளதாகவும், கூடுதலாக 37 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் நீண்டகால பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் பாதுகாப்பிற்கு உள்நாட்டு தொழில் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும் திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

>>>>><<<<<

விவாதங்கள் மற்றும் ஒருமித்த கருத்து மூலம் ஜனநாயகம் வலுவடையும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 1924ஆம் ஆண்டு முதல் 1930ஆம் ஆண்டுவரை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்கள் தொடர்பான தொகுதிகளை வெளியிட்டுப் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

ஜனநாயக நிறுவனங்களுக்கும், இளைஞர்களுக்கும் இந்த தொகுதிகள் ஒரு வழிகாட்டியாக அமையும் என்று அவர் கூறினார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய வீரர்களின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை பேணிக் காப்பது அரசின் கடமை என்று அவர் தெரிவித்தார்.

உலக நாடுகளுக்கு நமது ஜனநாயகம் எடுத்துக்காட்டாக திகழ்வதாக அவர் கூறினார்.

நமது அரசியல் சாசனம் மற்றும் ஜனநாயக பாரம்பரியம் இளைஞர்களுக்கு ஊக்கசக்தியாக விளங்குவதாக திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

>>>>><<<<<

Hormuz நீரிணை பகுதியில் ஈரான் - அமெரிக்கா இடையேயான தாக்குதல் தீவிரமடைந்துள்ளது.

இந்த நீரிணை வழியாக கடக்க முயன்ற அமெரிக்க கப்பல்கள் மீது, ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதல்களை அமெரிக்கா வானிலேயே முறியடித்தது.

ஈரானின் ட்ரோன் ஏவுதளமான Bandar Abbas துறைமுகம் மீதும் அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையே வாஷிங்டனில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில், இந்த தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இதனிடையே, லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் முகாம்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் 31 பேர் உயிரிழந்துள்ளதாக லெபனான் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தியாகத்திருநாளாம் பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்பட்டது.

இலங்கையில் பக்ரீத் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் இஸ்லாமியர்களால் கொண்டாடப்பட்டது.

கொழும்பு உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் உள்ள மசூதி மற்றும் மைதானங்களில் ஏராளமான இஸ்லாமியர்கள் தொழுகையில் ஈடுபட்டு, வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

பங்களாதேஷில் தலைநகர் டாக்கா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் தொழுகையில் ஈடுபட்டனர்.

பங்களாதேஷ் அதிபர் திரு. *Mohammed Shahabuddin*, பிரதமர் திரு. *Tarique Rahman* உள்ளிட்ட ஏராளமானோர் தேசிய ஈத்கா மைதானத்தில் தொழுகையில் ஈடுபட்டனர்.

பின்னர் உரையாற்றிய அதிபர் திரு. *Mohammed Shahabuddin*, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறுகிறது.

***Chelmsford*-ல்** இப்போட்டி இரவு மணி 11 மணிக்கு தொடங்குகிறது.

---------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா வெற்றிபெற்றது.

பெர்த்தில் நடைபெற்ற இப்போட்டியின் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில், இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து சமநிலையில் இருந்தன.

இதனையடுத்து, சூட்அவுட் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் இந்தியா ***4-1*** என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று, சமநிலையில் உள்ளன.

>>>>><<<<<

***Moldova*** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், ***6-4, 7-6*** என்ற செட்கணக்கில் செக்குடியரசின் ***Kolar Zdenek-***ஐ வென்றார்.

>>>>><<<<<

***20*** வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டி இன்று ஹாங்காங்கில் தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் ***Shahnavaz Khan, Abhay Singh, Aarti*** உள்ளிட்ட ***48*** பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>END<<<<<